நாரம்மல பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாரம்மல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நாரம்மல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பஹல மெதகொட பொது மயான நில காணி, அம்பகம்மன முன்பள்ளி பாடசாலை கட்டிடம் மற்றும் மக்கள் வங்கிக்கு அருகில் உள்ள பொது மலசலகூடத்தின் பெறுமதி என்பன இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	மதிப்பீடு செய்து பெறுமதியை பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுமதிகளை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி நடைமுறைக் கணக்கின் கீழ் ரூபா 214,580 மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	2025 இன் இறுதிக் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(இ)	உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்புக்களாக வேறுபடுத்தி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமல் ரூபா 1,277,110 ஆன மொத்த மீதியும் நடைமுறை அல்லாப் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 இன் இறுதிக் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஈ)	திரண்ட நிதி காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 40,000,000 நிலையான வைப்புப் பெறுமதி முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 இன் இறுதிக் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 05 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும், அதற்குரிய பட்டோலைகளின் மீதிக்கும் இடையே ரூபா 356,305 இணக்கம் இன்மை காணப்பட்டது.	2025 இன் இறுதிக் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய வேறுபாடுகளை இனங்கண்டு பதிவேடுகளை சரி செய்து அதன் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 38(2) ஆம் பந்தி	நிதி கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமாக உள்ளகக் கட்டுப்பாடு காணப்படுகின்றமைக்கும் அந்த முறைமையின் ஆக்க பூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமானதாக பேணிச் செல்வதற்காக தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிந்த மையையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்ற வேண்டிய எழுத்து மூல மீளாய்வின் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறை ஒன்று பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமானக் கோவை			
	நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571	பெறுமதி ரூபா 1,910,486 ஆன 02 வருடங்களை விஞ்சிய 113 வைப்புக்களை ஓய்வுபெறச் செய்வதற்கு	தற்போது இரண்டு வருடங்களை விஞ்சிய வைப்புக் காரர்களுக்கு தமது வைப்புக்களை	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வைப்புக்களை ஓய்வு பெறச் செய்வதற்கு

	நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	விடுவிக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதுடன் வைப்புக்கள் விடுவிக்கப்படாது இருக்குமாயின் வைப்புக்களை எதிரவரும் 03 மாதங்களுக்குள் வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,594,188 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,623,618 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
i.	ஆதன வரியும் வரியும்	13,058	11,849	11,621	4,759	12,753	11,554	9,181	4,530
ii.	வாடகை	29,687	65,405	65,490	858	26,400	27,740	27,578	943
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	1,390	2,288	2,288	-	1,390	1,773	1,773	-
iv.	ஏனைய வருமானம்	58,991	61,702	61,702	-	40,001	33,355	33,355	-
	மொத்தம்	103,126	141,244	141,101	5,617	80,544	74,422	71,887	5,473

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) மீளாய்வாண்டின் சிட்டையிடப்பட்ட கேள்வி வருமானம் ரூபா 141 மில்லியன் இறைச்சிக் கடையில் இருந்தும்,		வழங்கப்பட்டுள்ள நிலுவை வருமானத்தை தாமதம் இன்றி

	ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமானப் பெறுவனவுகளை உள்ளடக்கி ரூபா 141 மில்லியன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டுகளின் நிலவையுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 05 மில்லியன் மேலும் அறவிட வேண்டிக் காணப்பட்டது.	மீன் கடையில் இருந்தும் ரூபா 576,241 தொகை அறவிட வேண்டியிருந்ததுடன் அதனை அறவிடுவதற்காக குழியாப்பிட்டி மாவட்ட நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரி நிலுவை மீதி ரூபா 4,713,121 ஆக இருந்ததுடன் 2025 மார்ச் 31 ஆந் திகதி வரையில் அத்தொகையில் ரூபா 3,668,603 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதி நிலுவைப் பணம் எதிர்காலத்தில் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	**வீதவரி**		
	ஆதனவரி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டுத் திணைக்களத்தை வரவழைத்து மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	2021 மே 20 ஆந் திகதி புதிய மதிப்பீடு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடப்பட்டிருந்த போதும் அந்தப் பணிகள் நிறைவேற்றப்படவில்லை.	ஆதனவரி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**வாடகை**		
(i)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடந்த ஆண்டுகளின் நிலுவையும் உள்ளடக்கி ரூபா 858,000 தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது.	மேலும் அறவிடுதற்குள்ள தொகையை அறவிடுவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	2024 ஆம் ஆண்டுக்காக சபைக்குச் சொந்தமான வருடாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்படுகின்ற 44 ஆதனங்களின் கேள்விப் பெறுமதி ரூபா 7,290,680 ஆன 22 ஆதனங்கள் ஆண்டில் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்க வில்லை.	நான்கு தடவைகள் கேள்வி கோரப்பட்ட போதும் கேள்விதாரர் முன்வராமை காரணமாக 20 சொத்துக்கள் வாடகைக்கு வழங்க முடியாதிருந்தது.	விண்ணப்பதாரர்களுக்கு சமர்ப்பிக்காமைக்கான காரணத்தை விசாரணை செய்து மீண்டும் கேள்வி கோரி ஆதனங்களை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உபவிதிகள் விதிக் வேண்டியிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 53 விதிகள் விதிக்கப்பட்டிருந்த போதும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	வர்த்தமானி இலக்கம் 1705, 1716, 1964, 2030, 1992 மற்றும் 1712 இன் கீழ் உபவிதிகள் விதிக்கப்பட்டுள்ளது.	உபவிதிகளை விதித்து சபையின் நடவடிக்கைகளை முறைமைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கழிவுப் பொருள் சேகரிக்கும் நிலையம் 200 இற்கு அண்ணளவான அளவில் இருந்து சேகரிக்கப்பட்டு இலத்திரனியலின் மூலம் உடைந்த பொருட்கள் (தொலைக்காட்சி, டியூப் மற்றும் மின்குமிழ்கள்) முறையற்ற வகையில் அகற்றுதல் மற்றும் நீக்கப்பட்டதன் காரணமாக இலத்திரனியல் கழிவுப் பொருட்களில் காணப்படுகின்ற உலோகம் பிரதேசத்தில் நீர் மூலங்களில் சேர்வதனால் அதிக ஆபத்து மற்றும் வாயு மண்டலத்தின் பாதிப்பும் ஆபத்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	இந்த தொழில் முயற்சி தொடர்பாக பல்வேறு சந்தரப்பங்களின் போது மாகாண சுற்றாடல் அதிகார சபை உள்ளடக்கிய சகல அரச நிறுவனங்களுக்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றாடல் பாதிப்பைக் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	ஒலியதெனிய கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள காணியை கைப்பற்றுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 8,000,000 தொகை 2024 பெப்ரவரி 04 ஆந் திகதி வரையில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணி சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	காணியை கையேற்கும் நடவடிக்கைகளுக்காக உரிய அதிகார தரப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 07 கணக்குகளில் ரூபா 22,344,475 மீதி ஒன்று காணப்பட்டதுடன் அந்த மீதியில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 22,337,974 காணப்பட்டது.	கிடைக்க வேண்டிய கணக்குகளில் சம்பள மீளளிப்பாக தற்போது ரூபா 3,668,603 தொகை, கடை வாடகை நிலவை மீதியில் ரூபா 246,596 மற்றும் முற்பண மீதி என்பன தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.	பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 17 கணக்குகளில் ரூபா 47,527,025 மீதி காணப்பட்டதுடன் அதில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 11,584,241 மீதி மற்றும் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலம் கடந்த ரூபா 35,942,785	செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோரிடம் இருந்து செலவின கடன் கொடுத்தோரில் ரூபா 4,799,066, வேலைக் கடன் கொடுத்தோரில் ரூபா 8,026,129 வழங்கல் கடன் கொடுத்தோரிடம் இருந்து	செலுத்த வேண்டிய நிதியின் இருப்பைக் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	மீதியும் காணப்பட்டது. இவற்றின் இருப்பை உறுதிப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ரூபா 516,076 தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் பொது வைப்பு பதிவேட்டில் காணப்படுகின்ற 02 வருடங்களை விஞ்சிய மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையினால் பராமரிக்கப்படுகின்ற மயான நிலங்களின் பௌதீக பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அளவிடல் மேற்கொண்டு வேலி எல்லை அமைக்க வேண்டி இருந்த போதிலும் 69 மயான நிலங்களின் வேலி எல்லைகள் இட்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள மயான நிலங்களை அளவிடல் மேற்கொண்டு அளவிடப்பட்டுள்ளமையால் அந்த மயான நிலங்களின் வேலி எல்லையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான பொதுக் கிணறுகள் மற்றும் குழாய் கிணறுகள் என்பவற்றை இனங்காண்பதற்காக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டில் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் பொதுக் கிணறுகள் மற்றும் குழாய் கிணறுகளை இனங்காண்பதற்காக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சபை அதிகார பிரதேசத்தில் 108 பொதுக் கிணறுகள் மற்றும் 77 குழாய் கிணறுகள் என்பன இனங்காணப்பட்டுள்ளது.	சொத்துக்களின் இருப்பினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற பொதுக் கிணறுகள் மற்றும் குழாய் கிணறுகளின் பதிவேட்டை நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	சபைக்குச் சொந்தமான பொதுக் கிணறுகள் மற்றும் குழாய் கிணறுகள் பதிவேட்டை நாளது வரையாக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	பதிவேடுகளை நாளது வரையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.
(ஈ)	பெறுமதி ரூபா 116,924,629 ஆன 10 காணிக் கூறுகளின் உரித்தை நாரம்மல பிரதேச சபைக்க கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த கையளித்தல் நடவடிக்கைகள் எதிர் காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	கையேற்கப்படாத காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் பிரகாரம் மயான நிலங்கள் மற்றும் அடக்கம் செய்யதல் தொடர்பாக உரிய அதிகாரத் தரப்பினர் பிரதேச சபையாக இருந்த போதிலும் சபையினால் பராமரிக்கப்படுகின்ற 77 மயான	பிரதேச செயலகம் மற்றும் நில அளவைத் திணைக்களம் ஒன்றிணைந்து தற்போது பிரதேச சபைக்கு கையளிக்கும் நடவடிக்கைகளுக்கு உரிய பணிகளை மேற்கொள்கின்றது.	கையேற்கப்படாத மயாண நிலங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நிலங்களுக்கு இடையே 68 இன் உரித்து சபைக்கு சொந்தமாகக் காணப்படவில்லை.

3.4 செயற்திட்டம், இலக்குகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,690,000 ஆன 06 வேலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு கடன் கொடுத்தோர் ஆக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	பொது நிதியினை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 07 வெற்றிடங்களும் 15 மிகையும் காணப்பட்டதுடன் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்படவில்லை.	எதிர் காலத்தில் அரசாங்கத்தின் மூலம் எடுக்கப்படுகின்ற தீர்மானத்தின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அங்கீகரிக்கப்படாத பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைப் பதவியினை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் மீளாய்வாண்டுக்கு உரிய 2025 பெப்ரவரி 25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் நிச்சயமற்ற கணக்கில் அதன் தொங்கல் கணக்கில் ரூபா 1,179,017 மீதி ஒன்று காணப்பட்டமை மற்றும் சில கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு முடியாதிருந்ததன் காரணமாக 2025 மே 21 ஆந் திகதி மீள கையேற்கப்பட்டதுடன் மீண்டும் திருத்தப்பட்டு 2025 யூன் 03 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	2025 பெப்ரவரி 25 ஆம் திகதி கணக்காய்வுக்கு கையளிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்து மீண்டும் 2025 யூன் 03 அந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரித்து குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 66 வேலைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 4,755,000 நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டில் காணப்பட்ட அதிக மழையின் காரணமாகவும் மோசமான காலநிலையின் காரணமாகவும் பாதிப்புக்கு உட்பட்ட வீதிகளை மீளளிக்கப்பட்டதுடன் பொதுமக்கள் கோரிக்கையின் அடிப்படையில் முழுமையாகக் கம்பனிக்கு பாதிப்பு ஏற்படுகின்ற வீதிகளை அமைப்பதற்கு ஏற்பட்டமையால் அதிக ஆபத்துக்க உட்பட்ட வீதிகள் மறுசீரமைக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.	பாதீட்டின் மூலம் நிதியேற்பாடுகள் ஒதுக்கி வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கிய செயற்திட்டம் நிறைவேற்றப்படல் வேண்டும்.

(ஆ) வருடாந்த பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்படாது இருந்த மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 53 செயற்திட்டங்களுக்காக ரூபா 5,935,286 செலவிடப்பட்டிருந்தது.	அதிக அளவில் ஆபத்துக்கு உட்படுகின்ற வீதிகள் மறுசீரமைக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.	வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் 03 வருமான விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கு இடையே 04 சதவீதம் முதல் 31 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டதுடன், 08 செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டுக்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 15 சதவீதத்திற்கும் 79 சதவீதத்திற்கும் இடையிலான முரண்கள் காணப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் பாதீடு தயாரிக்கும் போது சரியாகவும் உள்ளபடியாகவும் வருமானங்களை எதிர்வு கூறி மற்றும் ஆய்வு அடிப்படையில் யதார்த்தத்திற்கு பொருத்தமான வகையில் பாதீடு தயாரிப்பதற்கும், விசேடமாக சபை நிதியத்தை பயன்படுத்தி மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பாதீடு செய்யப்பட்ட வேலைகளை முன்னுரிமை வழங்கி அந்த வேலைகளை மேற்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	பாதீடு நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்கு உதவி வழங்குகின்ற கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துவதற்கு முடியுமாக வகையில் தயாரித்தல் வேண்டும்.

4.4 சுற்றாடல் பிரச்சனைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 95 ஆம் பிரிவின் பிரகாரம் இறந்த அல்லது அது போன்ற பொருட்கள் தீங்கு விளைவிக்காத வகையில் அகற்ற வேண்டியிருந்தமையை கண்காணிப்பதற்கு தேவயையான சகல வேலைத் திட்டங்களும் மற்றும் முற்காப்பு ஏற்பாடுகளும் கவனத்தில் கொள்ள வேண்டியிருந்த போதிலும் சேற்றுக் கழிவுப் பொருள், கழிவுப் பொருள் நிலையம் அமைந்துள்ள காணியில் முறையற்ற வகையில் போடப்படுகின்ற இறந்த கழிவுகளை அகற்றுவதற்கு உரிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாது இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.	மனிதர்கள் வசிப்பதற்கு தூரத்தில் அமைந்துள்ள இந்த சேற்றுக் குழிகளில் கழிவுகளை அகற்றுதல் தொடர்பாக இதுவரை முறைப்பாடு கிடைக்காது இருந்ததுடன் ஒழியதெனிய கழிவுப் பொருள் நிலையத்திற்கு அடுத்தால் உள்ள இரண்டு ஏக்கர் நில அளவை கைப்பற்றி சேற்றுக் கழிவுகளை சுத்திகரிக்கும் முறைமை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	பொதுமக்கள் பாதிப்பு உட்படாத வகையிலும், சுற்றாடல் பாதுகாக்கும் வகையிலும் கழிவுகள் மற்றும் களி கழிவுகளை அகற்றுதல் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் உரிய அனுமதிப்பத்திரமும் பெறப்படல் வேண்டும்.

4.5 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கமாக 2030 வரையும் உலகத்தில் சகல இடங்களிலும் நடமாடக் கூடிய நபர்களின் பார்வைக் குறைபாடுகளுக்கு இடையில் சபைக்கு அடைய முடியாதிருந்த நோக்கங்கள் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் சபைக்கு பிரயோக ரீதியில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காண்பது தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.	தற்போது பிரயோக ரீதியில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காண்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.